முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்**

## AA1 பரீட்சை – 2017 சனவரி

# (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

(Economics for Business and Accounting)

2017–01–28
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட விடைப் புத்தகத்தில் பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரே மொழியில்*** *மட்டும் எழுதப்படல் வேண்டும்.*

(4) *எல்லா செயன்முறைகள் மற்றும் கணிப்புகளை சமர்ப்பிக்கவும். ஏதாவது எடுகோள்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.*

(7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச் சொல் உள்ளடங்கியிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *முதல்* ***1.10*** *வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. நீங்கள் தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உங்களது விடைப்புத்தகத்தில் வினாவுக்குத் தரப்பட்ட இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** நிரம்பல் விதி (Law of supply) ஆனது:


(1) நிரம்பல் மாற்றத்திற்கும் வருமான மாற்றத்திற்குமிடையிலான தொடர்பை விபரிக்கிறது.

(2) விலைக்கும் நிரம்பல் கணியத்திற்குமிடையிலான தொடர்பை விபரிக்கிறது.

(3) நிரம்பல் கணிய மாற்றத்திற்கும் கேள்விக் கணிய மாற்றத்திற்குமிடையிலான தொடர்பை விபரிக்கிறது.

(4) நிரம்பல் கணியத்திற்கும் கேள்விக் கணியத்திற்குமிடையிலான தொடர்பை விபரிக்கிறது.

**1.2** பின்வரும் வரைபடம் ஒரு நாட்டின் உற்பத்திச் சாத்திய வளையியைக் காட்டுகிறது:




மேலுள்ள வரைபடத்திலுள்ள புள்ளி $x$ *ஆனது* :


(1) வளங்களின் குறைப் பயன்பாட்டைக் காட்டுகிறது.

(2) பொருட்களின் அடையமுடியாததொரு சேர்க்கையைக் காட்டுகிறது.

(3) வளங்களின் நிறை தொழிலைக் காட்டுகிறது.

(4) எதிர்கால பொருளாதார வளர்ச்சியின் ஒரு விரைவு வீதத்தைக் காட்டுகிறது.

**1.3** பின்வரும் வரைபடம் பண்டமொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது:




நுகர்வோர் மிகை (Consumer Surplus) :

(1) ரூ. 250/- (2) ரூ. 500/- (3) ரூ. 650/- (4) ரூ. 750/-

**1.4** தேயிலையின் விலை 8% ஆல் வீழ்ச்சியடையும்போது, கோப்பிக்கான கேள்விக் கணியம் 2% ஆல் சரிவடைகிறது. கோப்பி மற்றும் தேயிலைக்கிடையிலான கேள்வியின் குறுக்கு விலை நெகிழ்ச்சி (Cross price elasticity):

(1) -0.25 (2) + 2.0 (3) + 4.0 (4) + 0.25

**1.5** பின்வருவனவற்றுள் நேரில் வரிகள் விதிக்கப்படுவதற்கான நோக்கமாக அமைவது எது?

(1) அரசாங்கத்திற்கான வரி வருமானத்தைப் பிறப்பிப்பது

(2) தீங்கு விளைவிக்கக்கூடிய உற்பத்திப் பொருட்களின் நுகர்வினை ஊக்கங்கெடச் செய்வது

(3) குறிப்பிட்ட பொருட்களின் நுகர்வினை ஊக்கப்படுத்துவது

(4) மேலுள்ள அனைத்தும்.

**1.6** பின்வருவனவற்றுள் பொதுப் பொருட்களின் (Public goods) ஒரு பண்பியல்பாக அமைவது எது?

(1) நுகர்விலுள்ள போட்டி மனப்பான்மை

(2) தவிர்க்கக்கூடிய தன்மை அற்றது (Non-Excludability)

(3) பொருளின் இலாபத்தன்மை

(4) தனியார் துறையினரால் உற்பத்திசெய்யப்பட்டது

**1.7** பின்வருவனவற்றுள் அரசாங்கப் பாதீட்டின் ஒரு பிரதான நோக்கம் **அல்லாதது** எது?

(1) வளங்களின் வினைத்திறனான ஒதுக்கீடு

(2) மொத்த உள்நாட்டுச் சேமிப்பை அதிகரித்தல்

(3) வருமானத்தின் மீள் பகிர்வு

(4) பொருளாதார உறுதித்தன்மையைப் பேணுதல்

**1.8** 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைக்கிணங்க, 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தனிநபர் வருமானம்,

(1) US $ 3,280 (2) US $ 3,924 (3) US $ 2,900 (4) US $ 3,700

**1.9** பின்வருவனவற்றுள் எது தேசிய வருமானச் சுற்றோட்டப் பாய்ச்சலிலிருந்தான ஒரு வெளிப்பாய்வாக (leakage) இருக்கிறது?

(1) முதலீடுகள் (2) சேமிப்புகள்

(3) அரசாங்கச் செலவினங்கள் (4) ஏற்றுமதிகள்

**1.10** பொருளாதாரமொன்றின் மூலதனத் திரட்டல் என்பது,

(1) தொழில் சிறப்புத்தேர்ச்சி இருக்கும்போது நிகழ்கிறது.

(2) நவீன உற்பத்தி நுட்பங்கள் இருக்கும்போது நிகழ்கிறது.

(3) பொருளாதாரம் அதன் மூலதன இருப்பினை அதிகரிக்கும்போது நிகழ்கிறது.

(4) உற்பத்திப் பொருட்களின் தரத்தில் மேம்பாடொன்று இருக்கும்போது நிகழ்கிறது.

இல. **1.11** தொடக்கம் **1.15** வரையிலான பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **"சரியானதா"** அல்லது **"தவறானதா"** என்பதைக் குறிப்பிடுக. உமது விடையினை (சரியானது / தவறானது) வினாவுக்குரிய இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதுக.

**1.11** நிரம்பலில் மாற்றமின்றி பண்டமொன்றிற்கான கேள்வியில் ஏற்படும் ஒரு அதிகரிப்பானது அப்பண்டத்தின் சமநிலை விலை மற்றும் சமநிலைக் கணியம் ஆகிய இரண்டிலும் ஒரு அதிகரிப்பை ஏற்படுத்துகிறது.

**1.12** சிலருரிமையின் (சிலர் ஆதிக்கத்தின்) கீழ், சந்தையில் அதிக எண்ணிக்கையிலான உற்பத்தி யாளர்களும் / விற்பனையாளர்களும் வாடிக்கையாளர்களும் இருக்கின்றனர்.

**1.13** சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையீடு செய்வதற்கான பிரதான காரணம் சந்தைத் தோல்விகளைச் (market failures) சரிசெய்வதற்காகும்.

**1.14** ஏனைய நாணயங்கள் சார்பாக குறித்த நாணயத்திற்கான நிரம்பல் மற்றும் கேள்வியின் ஊடாக வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தையின் மூலம் நிலையான நாணயமாற்று வீதம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

**1.15** ஒரு நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை அளவீடு செய்யும்போது பொருளாதார அம்சம் மாத்திரம் கருத்திலெடுக்கப்படுகிறது.

இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.

**1.16** நுகர்வோர் தமது ....................... (பாவனையை / இலாபத்தை) உச்சப்படுத்த முனைகின்றனர்.

**1.17** ......................... (உற்பத்தியாளர்களை / நுகர்வோரை) பாதுகாப்பதற்காக அரசாங்கத்தினால் குறைந்தபட்ச விலைகள் (கீழ் எல்லை விலைகள்) (Price floors) விதிக்கப்படுகின்றன.

**1.18** ....................... (இறைவரிக் கொள்கை / நாணயக் கொள்கை) ஆனது பேரினப் பொருளாதார நிலைமைகளில் ஆதிக்கம் செலுத்துகின்ற அரசாங்கத்தின் செலவு மற்றும் வருமானக் கொள்கை மீது கவனஞ் செலுத்துகிறது.

**1.19** மற்றுமொரு நாட்டினை விட ஒரு நாட்டினால் குறைந்த சந்தர்ப்பச் செலவொன்றில் பண்டம் ஒன்றை உற்பத்திசெய்ய முடியுமெனின் அது ....................... (தனி அனுகூலம் / ஒப்பீட்டு அனுகூலம்) என அறியப்படுகிறது.

**1.20** சகல உள்ளீடுகளின் அதிகரிப்பையும் விட ஒரு சிறிய விகிதத்தில் (proportion) வெளியீடு அதிகரிக்குமாயின் அது ....................... (அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவு / குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு) என அடையாளப்படுத்தப்படுகிறது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) (i) பொருளாதாரமொன்றின் பிரதான பொருளாதார வளங்களைப் (economic resources) **பட்டியலிடுக**. (02 புள்ளிகள்)

(ii) சந்தர்ப்பச் செலவுக் (opportunity cost) கோட்பாட்டினை உதாரணம் ஒன்றுடன் **விபரிக்குக**. (03 புள்ளிகள்)

(b) சந்தைப் பொருளாதார முறைமையின் பண்பியல்புகள் (characteristics) ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

(a) இலங்கையின் நிதி முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் இரண்டினைக் (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(b) (i) "நாணயக் கொள்கை (monetary policy)" என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(ii) நாணயக் கொள்கையின் நான்கு (04) கருவிகளைப் (Instruments) **பட்டியலிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) "பண நிரம்பல் (supply of money)" என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) (i) பணவீக்கத்திற்கான இரண்டு (02) காரணங்களைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(ii) பணவீக்க வீதம் அதிகரிப்பதன் காரணமாக இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு ஏற்படும் தாக்கங்கள் ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

ஒரு வருட காலத்திற்கான தேசிய வருமானத்துடன் தொடர்புடைய பொருளாதாரமொன்றின் பின்வரும் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

| | **ரூபா (மில்லியனில்)** |
|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – காரணிக் கிரய விலையில் | 3,250 |
| நேரில் வரிகள் | 175 |
| நிகரக் காரணி வருமானம் - வெளிநாட்டிலிருந்து | 250 |
| மூலதனத் தேய்மானம் | 150 |
| மானியங்கள் | 125 |
| ஏற்றுமதிகள் | 320 |

***நீங்கள் செய்யவேண்டியவை :***

பின்வருவனவற்றைக் **கணிக்குக.**

(a) (i) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (03 புள்ளிகள்)

(ii) மொத்த தேசிய உற்பத்தி (GNP) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(iii) நிகர தேசிய உற்பத்தி (NNP) – சந்தை விலையில் (01 புள்ளி)

(b) ஒரு நாடு கடைப்பிடிக்கும் (adopted) பிரதான பேரினப் பொருளாதார நோக்கங்கள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

<u>**பகுதி C**</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

பயனுறுதிமிக்க ஒரு கொடுக்கல் வாங்கலை நிறைவேற்றுவதற்காக வாங்குபவரும் விற்பவரும் ஒருவரோடொருவர் இடைவினையாற்றும் வாய்ப்பினைச் சந்தை வழங்குகிறது. பொருட்கள், சேவைகளின் நுகர்வின் ஊடாக வாங்குபவர்கள் அனுபவிக்கக்கூடிய திருப்தியின் மூலம் வாங்குபவர்களது நடத்தை உந்தப்படுகிறது.

(A) (a) (i) உற்பத்தி மற்றும் கிரயங்கள் தொடர்பான ''குறுங்கால ஓட்டம் (short run)'' மற்றும் ''நீண்டகால ஓட்டம் (long run)'' ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாட்டைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(ii) குறுங்கால ஓட்டத்தில் நிறைபோட்டி நிறுவனம் ஒன்று தனது இலாபத்தை எவ்வாறு உச்சப்படுத்துகிறது என்பதை வரைபொன்றின் உதவியுடன் **விபரிக்குக**. (05 புள்ளிகள்)

(b) பண்டமொன்றின் பின்வரும் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

$$Qd = 2,800 - 25p$$

$$Qs = -200 + 100p$$

| |
|---|
| Qd = கேள்விக் கணியம் |
| Qs = நிரம்பல் கணியம் |
| P = விலை |

(i) பண்டத்தின் சமநிலை விலையினைக் (equilibrium price) **கணிப்பிடுக**. (03 புள்ளிகள்)

(ii) பண்டத்தின் சமநிலைக் கணியத்தைக் (equilibrium quantity) **கணிப்பிடுக**. (02 புள்ளிகள்)

(B) சர்வதேச வர்த்தகத்தின் மூன்று (03) அனுகூலங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |